# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.158/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W. 2. தங்கப்பாண்டியம்மாள்** |
| **Father's Name** | : **க/பெ.செல்வம்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **15.10.2019**

முதல் விசாரணை:

நான் பூச்சிபட்டியில் குடியிருந்து வருகிறேன். புகார்தாரர் எனது சகோதரர். அவர் இந்த வழக்கு சம்பவத்திற்கு ஒரு வாரம் காலம் கழித்து ஒரு விபத்தில் இறந்துவிட்டார். வளர்மதி எனது சகோதரரின் மனைவி. சாட்சிகள் 3,5,6 ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 10.04.2014ம் தேதி மதியம் 1மணியளவில் மதுரை – உசிலம்பட்டி ரோட்டில் மீட்டிங்காலில் நடைபெற்ற காதணிவிழாவிற்கு நான் புகார்தாரர் மற்றும் அவர் மனைவி மற்றும் எனது அம்மா ஆகியோர் சென்றுவிட்டு வெளியே வந்து பேருந்துக்காக நான் எனது அம்மா மற்றும் அவரது மனைவி அவரது உறவினர்கள் நின்று கொண்டுருந்தபோது கிழக்கில் இருந்து மேற்க்காக வந்த இருசக்கரவாகனம் வேகமாக வந்து மண்டபத்ற்கு முன்பு எங்களுடன் நின்றுருந்த எனது அம்மா மீது மோதியதில் பின் பக்க தலையில் எனது அம்மாவிற்கு பலத்த காயம் எற்பட்டது. இருசக்கரவாகனத்தை ஓட்டி வந்தவரை அங்கிருந்த நபர்கள் பிடித்துவிட்டார்கள். எனது அம்மாவை நானும் எனது பெரியம்மா மகன் துரைபாண்டி ஆகியோர் மற்றும் இருநபர்களுடன் சேர்ந்து உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு உடனடியாக கொண்டு சென்றோம். எனது அம்மாவிற்கு மேல்சிகிச்சை தேவைப்பட்டதால் அன்றைய தினமே மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் கொண்டுசென்றோம். எனது அம்மா 3 நாட்கள் தீவிர சிகிச்சைக்கு பின்பு சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துவிட்டார். சம்பவத்தினத்தில் இருசக்கரவாகனத்தை ஓட்டி வந்த நபரை

நான் பார்த்தேன். அன்றைய தினம் ஆஜார் எதிரிதான் இருசக்கரவாகனத்தை ஓட்டி வந்தார். என்னை போலீஸார் விபத்து சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

கு.வி:

மதுரை தேனி ரோட்டில் மூன்று மண்டபங்கள் அருகே அருகே உள்ளது என்றால சரிதான். விசேஷ நாட்களில் மூன்று மண்டங்களில் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். மக்கள் கூட்டம் அதிகமாக உள்ள காரணத்திணால் அங்கு செல்லும் வாகனங்கள் மெதுவாகதான் செல்லும் என்றால் சரிதான். மண்டபத்திற்க அருகே இருபுறமும் வேகத்தடை உண்டா என்றால் இல்லை. அருகே பள்ளி உள்ள காரணத்தினால் அந்த இடத்தில் வேகத்தடை உள்ளது என்றால் சரியல்ல. பள்ளி மதியம் 1மணிக்கு விடும் போது பள்ளி குழந்தைகள் ரோட்டை கடந்து செல்லும் என்றால் சரிதான். பொதுவாக விசேஷத்திற்கு சுமார் 1000முதல் 2000 மக்கள் வருவார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் விசேஷம் வைத்த நபர்கள் எனது பெரியம்மா மகன் ஆவார். வளர்மதி சம்பவ சமயத்தில் எனது அருகில் இருந்தார். எனது அம்மாவிற்கு சுமார் 60 வயது இருக்கும். எனது அம்மா வயது காரணமாக தளர்ந்து இருப்பார் என்றால் சரிதான். சம்பவதினத்தில் மண்டபத்தின் முன்பு நிறையே மக்கள் கூடியிருந்த காரணத்தினால் அங்கு வாகனங்கள் வேகமாக வர வாய்ப்பில்லை என்றும் வயது காரணமாக எனது அம்மா அரண்டு தானாக கீழே விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் சம்பவ சமயத்தில் மண்டபத்தில் இருந்தேன் என்றும் நான் சம்வத்தை நேரில் ' பார்க்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து எனது தம்பி இராமகிருஷ்ணன் மற்றும் அவரது மனைவி வளர்மதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் எனது அம்மா சிகிச்சையிலிருந்த போது பேசினார் என்றால் இல்லை. எனது அம்மா இறப்பிற்கு இழப்பீடு பெற வேண்டி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

/Sd./Thangapandiyammal
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd.. K.S.Rajeshkumar
District Munsif cum Judicial Magistrate No.I(FAC),
Usilampatti.